# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093825

1. District : திருநெல்வேலி மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு காவல்நிலையம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | Year: 2019 ஆண்டு | FIR No 09/2019 மு.த.அ. எண் | Date: 20.06.2019 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: இ.த.ச. Sections பிரிவுகள்: 120 (B), 420,409, 468, 471, 477 (A) 167

(iii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1) (c), 13(1) (d)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2006 | Date to : நாள் வரை 2011

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 2011 | Time to : நேரம் வரை 2016

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.06.2019 | Time : நேரம் 11.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து முலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — பந்தப்புளி கிராமம், 80 கி.மீ. வட மேற்கு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இ.சுப்பையா | (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர் திரு.இருங்கோள பிள்ளை

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02.04.1971 | (d) Nationality: நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு திருநெல்வேலி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1). திரு. A.K. ராஜகுரு, S/o, A. கந்தவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், பந்தப்புளி கிராமம், சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம். (2). திரு. P. காளிமுத்து, S/o, பொன்னுச்சாமி, முன்னாள் மக்கள் நலப் பணியாளர், எண். 3/386, வடக்குத் தெரு, வேலாயுதபுரம், பெருமாள்பட்டி போஸ்ட், சங்கரன் கோவில் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை. முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனரக குறிப்பாணை எண் PE 329/2016/RDP/TI நாள் 30.05.2019ன் படி திரு.கி.ராமசுப்பிரமணியன், S/o,கிருஷ்ணசாமி என்பவரின் மனுமீதான முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டிருந்தது. திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், சத்திரங்கொண்டான் அஞ்சல், 88/2, நாரணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கி.ராமசுப்பிரமணியன், S/o,கிருஷ்ணசாமி என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மாசிலாமணி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு 21.09.2016 ஆம் தேதி அனுப்பிய புகார் மனு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு இயக்குநரகத்தால் பெறப்பட்டது. மேற்படி புகாரில் திரு. A.K. ராஜகுரு (AO – 1), வயது - 45/2016, S/o, A. கந்தவேல்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...................... on point of jurisdiction.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station 20/6/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20/6/19 at 16.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் I. SUBBIAH.
Rank: நிலை DSP VAC TIN No. எண் ..........

பந்தப்புளி கிராம ஊராட்சி மன்றத் தலைவர், சங்கரன்கோவில் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் என்பவர் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் திரு. A.K. ராஜகுரு (AO – 1) என்பவர் பந்தப்புளி ஊராட்சி ஒன்றியத்திற்கு மின் சாதனங்கள் வாங்கியதில் நிதி முறைகேடு செய்துள்ளதாகவும் மற்றும் விற்பனை வரி அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத திரு. P.காளிமுத்து (AO – 2) என்பவருக்கு ஏராளமான காசோலைகள் (Cheques) வழங்கி அரசுக்கு பண இழப்பீடு ஏற்படுத்தியுள்ளதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் மீது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் அறிவுரைப்படி, சென்னை நகரப் பிரிவு-IV ல் முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. திரு. A.K. ராஜகுரு (AO – 1) என்பவர் கடந்த 2006 முதல் 2011 மற்றும் 2011 முதல் 2016 ம் ஆண்டு வரை சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பந்தப்புளி ஊராட்சி மன்ற தலைவராக இருந்துள்ளார். எனவே ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 2 (c) ன் படி மேற்கண்ட காலகட்டத்தில் இவர் பொது ஊழியராக பணியாற்றி உள்ளார். திரு. P.காளிமுத்து (AO – 2) என்பவர் 2006 ம் ஆண்டு முதல் 2010 ம் வருடம் வரை மக்கள் நலப்பணியாளராக தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பொறுப்பாளராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டதாக கூறியுள்ளார். இவர் தனிநபர் ஆவார். சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பந்தப்புளி பஞ்சாயத்திற்கு உட்பட்ட இடங்களில் எந்தவொரு தீர்மானமும் முடிவு செய்யப்பட வேண்டுமெனில் தீர்மானக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தீர்மானம் செய்துதான் முடிவு எடுத்தல் வேண்டும். தீர்மானக் குழு என்பது பஞ்சாயத்து தலைவர் மற்றும் துணை தலைவருடன் பந்தப்புளி பஞ்சாயத்திற்கு உட்பட்ட 8 வார்டு உறுப்பினர்களும் சேர்த்து மொத்தம் 10 பேர்கள் அடங்கிய குழுதான் தீர்மான குழு என்பதாகும். எந்தவொரு முடிவு எடுத்தாலும் 10 நபர்களும் சேர்ந்து தீர்மானம் செய்து அந்த தீர்மானத்தை நிறைவேற்றுவார்கள். அந்த தீர்மானத்தை அதற்குரிய பதிவேட்டில் எழுதி வைத்து விடுவார்கள். பஞ்சாயத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணை தலைவர் ஆகியோர் கையொப்பமிட வேண்டும். எதிரி திரு. A.K. ராஜகுரு (AO–1) மற்றும்

விற்பனை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர் அல்லாத எதிரி திரு. P. காளிமுத்து (AO–2) என்பவரும் சேர்ந்து கே.கே.கே. டிரேடர்ஸ் என்ற லெட்டர் பேடில் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் பந்தப்புளி கிராம ஊராட்சிக்கு தேவையான தெரு விளக்கின் மின் உதிரி சாமான்கள், மின் மோட்டார் உதிரி பாகங்கள், பைப் மற்றும் பைப்லைன் உதிரி பாகங்கள், சுகாதார தளவாட சாமான்கள், சுகாதாரப் பொருட்கள் ஆகியவற்றை கே.கே.கே. டிரேடர்ஸ், கிருஉஷ்ணப்பேரி மூலம் விநியோகம் செய்யப்படுவதற்கு ஆகும் பட்டியல் தொகைக்குரிய ஊராட்சியின் காசோலையை திரு.பொ.காளிமுத்து, த/பெ. பொன்னுச்சாமி, வேலாயுதபுரம் என்பவரின் பெயரில் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், கே.கே.கே. டிரேடர்ஸ் மூலம் வழங்கப்படும் மேற்படி பொருட்களுக்குரிய தொகைக்கான காசோலை அன்னார் பெயரில் வழங்க இதன் மூலம் தெரிவித்துக் கொள்வதாகவும், அன்னாரின் மாதிரிக் கையொப்பத்தை ஒப்புதல் செய்து அனுப்பப்படுவதாகவும், அதில் மூன்று முறை திரு.P.காளிமுத்து என ஒப்புதல் செய்தும், மேலும் அதில் Proprietor of Manager, for K.K.K.Traders, Krishnaperi என்றும் சீல் போட்டு, அதில் ஸ்டாம்ப் ஒட்டி K.Kannan என்று கையொப்பம் இட்டு, போலியான ஆவணத்தை உற்பத்தி செய்து, அதன் மூலம் பட்டியல் தொகைக்குரிய காசோலையை திரு.P.காளிமுத்து என்பவருக்கு 02.03.2013 முதல் 18.04.2015 வரை ரூ.3,33,510/-க்கு மேற்படி திரு.A.K. ராஜகுரு கொடுத்து, மேற்படி பணம் ரூ.3,33,510/- திரு.P. காளிமுத்து என்பவரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. செலவினச் சீட்டின் படி பொருள் வாங்கியமைக்கும், செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் ஊராட்சி மன்றத் தீர்மானம் காண்பிக்கப்படவில்லை என்றும், **2014-2015**ஆம் ஆண்டு வருடாந்திரத் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவருகிறது. எதிரி 1. திரு. A.K. ராஜகுரு (AO–1), 2. திரு. P. காளிமுத்து (AO – 2) என்பவர்கள் கூட்டு சதி செய்து, போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து, நம்பிக்கை மோசடி செய்து, ஏமாற்றி, பொய்யான கணக்கு வழக்குகளை தயாரித்து, அதை உண்மையானதாக உபயோகித்து, பொது ஊழியர் தனது பதவியைத் தவறாகப் பிரயோகம் செய்து மேற்படி

முதலாம் எதிரி, தனிநபரான இரண்டாம் எதிரி திரு.P.காளிமுத்து என்பவருக்கு ரூ.3,33,510/- க்கு ஆதாயம் கிடைக்க செய்து அதன் மூலம் அரசுக்கு ரூ.3,33,510/- பண இழப்பு ஏற்படுத்தி இருக்கின்றார்கள். மேற்படி நடவடிக்கைகள் சட்டப்பிரிவுகள் 120 (B), 420,409, 468, 471,477 (A), 167 இ.த.ச. மற்றும் 13 (2) r/w. 13(1)(c),13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனர். எனவே மேற்படி எதிரிகள் மீது திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.09/2019-ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் நகலையும் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

DSPVACTIN
20/6/19
Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
16/53A/1, Masilamani Nagar
Tirunelveli - 5